தொகுதி-9 எண் 1
Vol. 9 No. 1

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

27 பகுதி-2
Part -2

Scanned with CamScanner

# முல்லைத் திணையில் காணலாகும் இல்லறநெறி

முனைவர் இரா. முரளி கிருட்டினன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றன. மனிதன் வாழ்ந்த, வாழுகின்ற வாழ்க்கை முறைகளை நமக்கு எடுத்துக்காட்டும் திரைபிம்பமாக இலக்கியங்கள் விளங்குகின்றன. அகம், புறமாக இலக்கியங்களை வகைப்படுத்தினாலும் அக இலக்கியங்கள் மனிதர்கள் அகவொழுக்கங்களை எவ்வாறு பின்பற்றி வாழ்ந்தார்கள் என்பதை நமக்கு எடுத்தியம்புகின்றன. அகப்பாடல்களில் முல்லைநிலப்பாடல்கள் வெளிப்படுத்தும் இல்லறநெறிகளைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

கார்காலம், மறி, பெண்மான், காந்தள், பாசறை, இல்லாள்.

**முன்னுரை**

கணவன், மனைவி என்ற உறவை முதன்மையாகக் கொண்டதே குடும்ப வாழ்வாகும். குடும்பம் என்ற அமைப்பு மனிதனின் நிலையான வாழ்விற்கு வழி வகுத்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மணமுறை தோன்றியது முதல் வலுவான குடும்ப அமைப்பும் கட்டுப்பாடுகளும் தோன்றின. பொருள் தேடும் பொருட்டும் இன்ன பிற காரணத்திற்காகவும் தலைவன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்வான். ஆனால் மனைவி இல்லத்திலே இருந்து இல்லறம் நடத்துவாள். எனவேதான் மனைவியை இல்லாள் என அழைக்கும் வழக்கம் உருவானது. நல்லறமாகிய இல்லறத்திற்குத் தேவையானவை ஈகை, பொறுமை முதலிய நற்குணங்களாகும். தமிழ் நிலமான ஐவகை நிலங்களிலும் குடும்ப வாழ்வு செம்மனே நடைபெற்றது. முல்லை நிலத்தில்தான் கற்பு வாழ்க்கை சிறப்புற்றிருந்தது. பொருள் வயிற்பிரிவு, வினைவயிற்பிரிவு ஆகிய பிரிவுக்காலங்களில் தலைவியானவள் தலைவனின் பிரிவினை நினைத்து வருந்தி இல்லத்திலே ஆற்றியிருக்கும் ஒழுக்கமே முல்லை நில இல்லொழுக்கமாகமாகும். அவ்வாறு பிரிந்திருக்கும் போது தலைவன் வருவதாகச் சொன்ன கார்காலத்தை நினைத்து இல்லிலே காத்திருப்பாள் தலைவி. அதனாலேயே முல்லை நிலத்தின் ஒழுக்கம் மற்ற நில ஒழுக்கங்களிலிருந்து மேம்பட்டதாகத் திகழ்கின்றது.

**குடும்ப உறவு**

ஒவ்வொரு மனிதனுக்கும் அகவாழ்வு அன்பு நிறைந்ததாகவும், உணர்வுகள் சார்ந்ததாகவும் இருக்கும். மகிழ்ச்சியாய் வாழ, காதல், குடும்பம், திருமணம், பிள்ளைப்பேறு, நட்பு போன்றவை இயல்பாய் அமையவேண்டும். சமுதாயம் என்னும் கட்டமைப்பின் ஒரு அடித்தளமாகக் குடும்பம் விளங்குகின்றது. மனித வரலாற்றில் அனைத்துச் சமூகங்களிலும் குடும்பம் என்ற அமைப்புத் தொடர்ந்து கொண்டே வருகிறது. **“குடும்பம் என்பதை ஆங்கிலத்தில் பேமிலி (family) என்ற சொல்லால் குறிப்பிடுவர். இச்சொல் பேமுலஸ் (famolus) என்ற சொல்லிலிருந்து உருப்பெற்றது என்பர். பேமுலஸ் என்பதற்கு வீட்டு அடிமை என்பது பொருள். Familia என்றால் ஒருவருக்குச் சொந்தமான அடிமைகளின் மொத்தத் தொகை என்று பொருள். ஒரு புதிய சமுதாயத்தை, அமைப்பை வருணிப்பதற்காக உரோமானியர்கள் இந்தச் சொல்லைத்**



Scanned with CamScanner

தோற்றுவித்தார்கள். இந்த அமைப்பின் கீழ், தலைவன் ஒருவன் தன் மனைவியரையும், குழந்தைகளையும், பல அடிமைகளையும் அவர்களின் சாவையோ, வாழ்வையோ நிர்ணயிக்கும் அதிகாரத்துடன் வைத்திருந்தான்"[1] என்று நா.செல்வராசு குறிப்பிடுகின்றார்.

கணவன், மனைவி ஆகியோரை முதன்மையாகக் கொண்ட இல்லற வாழ்வென்பது குழந்தைப்பேறு இல்லாமல் நிறைவடைவதில்லை. தன் மனைவி மக்களோடு மகிழ்ந்திருத்தல் என்பது எல்லையில்லா இன்பத்தைத் தரக் கூடியது. முல்லை நிலத் தலைவி, தன் குழந்தையுடனும் கணவனுடனும் ஒன்றாகப் படுத்து உறங்கும் காட்சியினைப் பாடல்களில் காணமுடிகிறது. மான்கன்றினை இடையிலே இட்டு ஆண்மானும் பெண்மானும் இருபக்கத்திலும் கிடந்ததைப் போலப் புதல்வன் நடுவிலே விளங்க இரண்டு பக்கத்திலும் தலைவனும் தலைவியும் படுத்திருந்தனர் என்பதனை,

"மறியிடைப் படுத்த மான்பிணை போல
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிது மன்றவர் கிடக்கை முனிவின்றி"
(ஐங். 401:1-3)

ஐங்குறுநூறு விளக்குகின்றது.

இப்பாடலைப் போலவே தலைவன் தலைவியர் இல்லறத்தில் தன் மகனுடன் மகிழ்ந்திருந்ததை ஐங்குறுநூற்றின் 402,404,40 பாடல்கள் விளக்குகின்றன. மகன் சிறுதேர் உருட்டி விளையாடுவதைத் தன் மனைவியை அணைத்த வண்ணம் தலைவன் கண்டு மன மகிழ்வு கொள்கிறான் என்பதை ஐங்குறுநூறு 403,406 ஆகிய பாடல்கள் விளக்குகின்றன. தலைவனில் மார்பில் மகன் ஏறி விளையாடும் நிகழ்வு ஐங்.410வது பாடலில் இனிதான இல்லறத்தினை முல்லை நிலத் தலைவன் பெற்றுள்ளான் என்பதைப் பாடல்கள் விளக்குகின்றன. இதில் பெண் குழந்தை பற்றிய குறிப்புகள் இல்லை. புதல்வன் என்ற ஆண் மகவு பற்றிய குறிப்பே பாடல்களில் காணப்படுகிறது.

### இல்லறத்திற்குத் துணை நிற்போர்

குடும்ப வாழ்வில் இல்லறம் இனிதே நடைபெறச் செவிலி, தோழி, பாணன் போன்றோர் பெருந்துணையாய் நின்றனர். "செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முக்கிய பங்கு பெறுகின்றனர். நற்றாய் ஒருபுறம் இருந்தாலும், செவிலித்தாய் பல்வேறு வகையில் குடும்ப வாழ்வில் தொடர்பு பெறுகிறாள். சமூகத் தாயாக விளங்கிய செவிலித்தாய் முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சியாக சங்க காலத்தில் வருவதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்திற்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்"[2]. செவிலியின் மகள் பின்னாளில் தலைவிக்குத் தோழியாவாள். "தலைவன் தலைவி இருவரும் உடன்போய், கணவன் மனைவியாக இணைந்து கணவனின் தந்தையகத்தில் வாழும் நேர்வழி விரிந்த குடும்ப அமைப்புப் பரவலாகக் காணப்படுகிறது. அயலகத்தில் வாழும் இவர்களைச் செவிலித்தாய் சென்று பார்த்து வந்து நற்றாய்க்கு உரைக்கும் குறிப்புகள் உள்ளன. தாய் தந்தை, உடன்பிறந்தோர் ஆகியோர் ஒன்று சேர்ந்து உடன்போக்கில் சென்ற மகளைப் பார்க்கச் சென்றது பற்றிய குறிப்புகள் இல்லை"[3]. முல்லை நிலத் தலைவி குடும்பம் நடத்தும் திறத்தைக் கண்ட செவிலி அதை நற்றாய்க்கு உரைக்கும் பாடல் முல்லைத் திணையில் காணப்படுகிறது. முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போன்ற தன் விரல்களை ஆடையில் துடைத்துக் கொள்கிறாள். வேறு ஆடை மாற்றிக்கொள்ளாமல் அதே ஆடையை உடுத்தியிருக்கிறாள். குவளை மலர் போன்ற கண்ணில் தாளிப்புப் புகை கமழ, இனிதான புளிக்குழம்பினைப் படைக்கிறாள். தலைவனோ இனிமையாக இருக்கிறது எனப் பாராட்டியவாறே உண்கிறான். இதைக் கண்டு தலைவி மனம் மகிழ்கிறாள்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ



Scanned with CamScanner

.......................................................

நுண்ணிதின் மகிழ்தன்று எண்ணுதல் முகனே"
(குறுந். 167)

இவ்வாறாகத் தலைவி தன் கணவனுக்கு உணவு படைக்கும் திறன் முல்லை நிலக் குடும்பத்தில் காணப்படுகிறது.

தோழியின் செயல்பாடு

முல்லை நிலத் தலைவியின் இருத்தலுக்குப் பெருந்துணையாய் இருந்தவள் தோழி. அவள் துவண்ட போதெல்லாம் தலைவன் வருவான் எனத் தேற்றும் செயலைத் தோழி மேற்கொள்வாள். தலைவன் வேந்துவிடு தொழிலின் காரணமாகப் பாசறையின்கண் தங்கியிருக்கிறான். இதை எண்ணித் தலைவி வருந்துகிறாள். வெற்றி வேந்தன் பாசறையின் கண் இருக்கும் தலைவன் உன்னைத் துறந்து வாழும் வல்லமை உடையவர் இல்லை. விரைவில் வருவார் ஆகவே வருந்த வேண்டாம் எனத் தலைவியைத் தோழி ஆற்றினாள்(ஐங்.461). தலைவன் வருவதாகச் சொன்ன கார்காலம் வந்தது. ஆனால் வினைமேற்கொண்ட தலைவன் வரவில்லை. கார்காலத்தைப் பார்த்துத் தலைவி வருந்துவதைக் கண்ட தோழி இது உண்மையான கார்காலமன்று. இப்போது பெய்வது வம்பமழை தலைவன் குறித்த நேரத்தில் வருவார் வருந்த வேண்டாம் என ஆறுதல் கூறுகிறாள். (குறுந்.251, 382)

"பருவம் வாரா வளவை நெரிதரக்

.......................................................

வம்ப மாரியைக் காரென மதித்தே"
(குறுந். 66:3-5)

காகம் கரைந்தால் வீட்டிற்கு விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை முல்லை நிலத்தில் இருந்தது. தலைவியின் பிரிவுத் துன்பத்தைப் போக்கும் வண்ணம் விருந்தினர் வருமாறு காக்கையும் கரைந்தது கரைந்த வண்ணம் தலைவனும் திரும்பி வந்தான். அதனால் கைமாறாகக் காக்கைக்கு நெய் கலந்த வெண்நெல் சோற்றை ஏழு கலத்தில் ஏந்தித் தந்தாலும் அப்பலி சிறிதாகும் எனத் தோழி கூறுகிறாள் (குறுந்.210). அவ்வாறு வினை முடிந்து வந்த தலைவனைக் கண்ட தலைவிக்கு மட்டுமல்ல எனக்கும் மிக்க மகிழ்வைத் தருகிறது. நின் ஆயுள் சிறக்கட்டும் என்று வாழ்த்துகிறாள் (அகம்.184).

தலைவியின் ஆற்றியிருக்கும் மாண்பு

கார்காலம் வந்து விட்டது பிச்சியின் அரும்புகள் நன்கு சிவந்துவிட்டன. இதைக்கண்டு தலைவி மயங்குகிறாள் ஏனென்றால் நம்மை நினைத்துத் தலைவன் செய்வினை முடியாமல் மீள்வாரோ என்று அஞ்சுகிறேன் என்கிறாள். தான் இன்னும் சில நாள் தலைவனைப் பிரிந்து ஆற்றியிருப்பேன் ஆனால் தலைவன் தன் வினை முடித்து மீண்டால் போதும் என்கிறாள்.

"என்ன குவர்கொல் பிரிந்திசி னோரே

.......................................................

கருவி மாமலைச் சிலைதருங் குரலே"
(குறுந். 94:5-7)

செய்வினை முடியாமல் பாதியிலே மீளுதல் ஆண்மையன்று எனப் பெரியோர் கருதினர். இதனை முன்பு துணியாத என் நெஞ்சம் இப்போது துணிந்துள்ளதால் நான் ஆற்றியிருந்து வாழ்வேன். இத்துணிவிற்கு என் தறுக்கண்மை துணையாயிற்று என்கிறாள் (குறுந்.341).

இருவரும் சேர்ந்து வாழும் வாழ்வே இல்லறத்தில் முதன்மையானதாகும். இதனை உணர்ந்தவனாக இருக்கிறான் முல்லை நிலத்தலைவன். தலைவியின் தோளாகிய அணையிடத்தே உறங்கிக் கழித்த நாட்களே இவ்வுலகத்தில் வாழ்ந்த நாட்களாகும். அவ்வாறு தலைவியோடு இணைந்து வாழாத நாட்களெல்லாம் உள்ளே ஒன்றுமே இல்லாத கருக்காயைப் போன்று பயனற்றவையே ஆகும் என்று தேர்ப்பாகனிடம் உரைப்பதுடன், தலைவியைக் காண்பதற்காகத் தேரை விரைந்து செலுத்துமாறும் கூறுகிறான்.



Scanned with CamScanner

"அரிவை தோளணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழும் நாளே"
(குறுந். 323: 6-7)

இது போன்றே "தலைவன், தலைவியை விரைவில் காண வேண்டும் என்ற ஆவலால் தேர்ப்பாகனிடம் தேரை விரைந்து செலுத்தும்படிக் கூறும் பாடல்கள் முல்லைத்திணையில் அதிகம் காணப்படுகின்றன"[4]. வினைமுற்றி இல்லம் திரும்பிய தலைவனைக் கண்ட தலைவி மேனி துவள அவிழ்ந்து குலையும் கூந்தலைக் கூடச் சரிசெய்ய எண்ணாமல் ஓடிச் சென்று தழுவிக்கொண்டாள் (நற்.42).

### வினை மேற்கொள்ளலும் தவிர்த்தலும்

போர் செய்யும் பொருட்டும் அரசனின் ஏவலுக்கு உட்பட்டும் இல்லில் தலைவியைத் தனிமையில் விட்டு வினை மேற்கொள்ளலும் நடைபெற்றிருக்கிறது. போர்வினை மேற்செல்ல முடிவெடுக்கும் தலைவன், முல்லை நில இருத்தல் ஒழுக்கத்தினை நினைவூட்டித் தலைவியின் உடன்பாட்டினைப் பெற்றுப் பிரிந்தான். தலைவியும் தலைவன் வரும்வரை அவனுக்காகக் இல்லிலே காத்திருக்கிறாள்.

"பல்லிருங் கூந்தற் பசப்பு நீவிடின்
.............................................
கல்லா யானை வேந்துபகை வெலற்கே"
(ஐங்.429)

அரசனும் தன் காதலியைப் பிரிந்து பகைமேற் செல்வதற்கு வரவில்லை. அதனால் போர் வினையைத் தவிர்த்துவிட்டான். ஆகவே நானும் உன்னைப் பிரிந்து செல்ல மாட்டேன் எனத் தலைவன் தலைவியிடம் கூறுகிறான். அரசன் பகைமேற் செல்லுதலைத் தவிர்த்தால் மட்டுமே தலைவன் இல்லிலிருக்க முடியும். முல்லை நில மாந்தர்கள் தங்கள் அரசனின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு இருந்தனர் என்பதை இப்பாடல் விளக்குகிறது. "வேந்துவிடு தொழிலாகிய இப்பிரிவுதான் முல்லை நிலக் குடும்பத் தலைவியின் இருத்தலுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது"[5] என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

### பாணன் தலைவனிடம் தூது செல்லல்

பாணன் முல்லைத்திணையில் தூது செல்பவனாக இருக்கிறான். "பருவ வரவின்கண் தலைவன் வரக் காலம் தாழ்ந்தபின் பாணனைத் தூதாகத் தலைவி அனுப்பி வைப்பாள். அப்போது பாணனிடத்துத் தோழியும் தலைவியும் கூறும் கூற்று நிகழும். தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனிடத்துத் தலைமகன் கூறுவதாகவும் கூற்று நிகழும்"[6] தலைவனிடம் சென்ற பாணன், தலைவி உன்னையே நினைத்துக் கண்ணீர் சிந்தி வருந்துகிறாள். அவ்வருத்தத்தை நான் சொல்லக் கேட்டும் நீ கவலை கொள்ளாமல் இருக்கிறாய். ஆகவே நீ எனக்குத் தலைவனும் இல்லை நான் உனக்குப் பாணனும் இல்லை என்கிறான் (ஐங்.480). நிலையை உணர்ந்த தலைவன் பசலைத் துன்பத்தை அடையும் தலைவியின் ஆதரவற்ற மனதிற்கு ஆறுதலாகச் சிறிது காலம் தங்கு அப்போது என் தேர் வருவதைக் காண்பாய் என்கிறான் (ஐங்.477). அதாவது விரைவிலே தலைவியைக் காண வருவேன் என்பதின் குறிப்பே இதுவாகும். இவ்வாறாகப் பாணனும் தலைவன் தலைவியரின் இல்லறம் இனிதே நடப்பதற்குத் துணை செய்கிறான்.

### விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது இல்லறத்தின் ஒரு பகுதியாகவே சங்க காலத்தில் பார்க்கப்பட்டது. வீட்டிற்குப் புதிதாக வருபவர்கள் விருந்தினர் ஆவர். பின்னாளில் வீட்டிற்கு உறவினர் வரினும் விருந்தினர் என்றே அழைக்கப்பட்டனர். முல்லைத் திணையில் செல்வ வளம் மிக்க ஒரு குடும்பத்தில் இரவு நேரத்தில் வீட்டுக்குள் விருந்தினர்களைப் புகவிட்டுப் பின் எவரேனும் உள்ளனரா என ஏவலர்களை விட்டு ஆராய்ந்து ஒருவரும் இல்லையெனில் கதவினை அடைப்பர்.

"பலர்புகு வாயி லடைப்பக் கடவுநர்
வருவீ ருளரோ வெனவும்" (குறுந்:118)

முல்லை நிலத்தில் தலைவனுக்குத் தரும் விருந்து பற்றிக் கூறும் போது, தலைவனுக்குப் பால்



Scanned with CamScanner

கொண்டு செய்யப்பட்ட இனிய உணவினையும் தலைவனோடு வரும் ஏவலர்களுக்கு வரகரிசியுடன் ஈயலை இட்டுச் சமைத்த உணவினையும் தலைவி வீட்டில் படைப்பர் என்று தோழி கூறுகிறாள்.

**"ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு**

**..............................................................**

**பாலுடை அடிசில் தொடீஇய ஒரு நாள்**
**மாவண் தோன்றல் வந்தனை சென்மோ"**
**(அகம்.394)**

இப்பாடலில் **"உணவு தருவதில் வேறுபாடு காட்டப்பெறும் இந்நிலையில் சமூக அடிப்படையை ஆராய்வது எளிதன்று. இதை உணவு தருவதில் வேறுபாடு காட்டப்பட்டது என்ற அளவில் கொள்வதா? உயர்வு தாழ்வு காட்டப்பட்டது என்று கருதுவதா?"** என ஆ. ஆறுமுகம் கூறுகிறார். இக்கருத்தினை நோக்கும்போது முல்லை நிலத்தில் குடும்பம் என்ற அமைப்புத் தோன்றி அதில் தலைவனுக்கு ஏவல் செய்யும் ஏவலர்கள் அவனுடன் செல்லுவர் என்பது தெரிகிறது. இதில் தலைவனின் உயர்வைக் காட்டவே உணவிலும் வேறுபாடுகள் தோன்றின என்ற முடிவுக்கும் வர இயலாது. ஏனெனில், முல்லைத்திணையில் இவ்வேறுபாடுடன் இப்பாடல் மட்டுமே காணப்படுகிறது. இவ்வாறு விருந்தோம்பலில் மக்களின் நிலைக்கேற்ப வேறுபாடுகள் காட்டப்பட்டனவா என்பது தொடர் ஆய்வுக்குரியது.

## முடிவுரை

முல்லை நிலத்தில் இல்லறம் என்பது கற்பு சார்ந்ததாக இருந்துள்ளது. மற்ற நிலங்களில் இல்லாத சிறப்பான ஒழுக்கமும் இல்லற மேன்மையும் காணப்பட்டதினால் இதனைக் கற்பு சான்ற முல்லை எனச் சிறப்பித்தனர். பொருள்வயிற்பிரிவு, வினைவயிற் பிரிவு என்ற பிரிவுகளை உள்ளடக்கிய முல்லைத்திணை, இருத்தலைத் தன் இல்லற ஒழுக்கமாகக் கொண்டுள்ளது. கணவனும் மனைவியும் இணைந்து வாழ்வதே இல்லறத்தின் மாண்பாகும். வினையின் காரணமாகப் பிரிந்து செல்லும் தலைவனை எண்ணியும் அவன் வினை முடியும் முன்னரே நம்மை நினைத்துத் திரும்பி வந்து விடக்கூடாது என்ற தலைவியின் ஆற்றியிருக்கும் பண்பும் முல்லை நிலக் குடும்ப வாழ்வைச் சிறப்பானதாக்குகிறது. பாடல்களின் அடிப்படையில் நோக்குகையில் வேந்துவிடு தொழிலைத் தவிர்க்க முடியாதவனாக முல்லைநிலத் தலைவன் காணப்படுகிறான். குடும்பம் என்பது நன்முறையில் இயங்குவதற்குத் தோழியும் பாணனும் தூது சென்றும் ஆறுதல் மொழிக்கூறியும் உதவுகின்றனர். தலைவியோடும் தன் பிள்ளைகளோடும் இல்லத்தில் மகிழ்ந்து வாழ்வதையே தலைவனும் விரும்பினான். இதுவே இல்லறம் என்பதன் முழுப்பொருளுமாகும்.

**சான்றெண் விளக்கங்கள்**

1. செல்வராசு, ரா., பண்டைத்தமிழர் திருமண வாழ்க்கை. ப.198.
2. சிவதம்பி, கா., சங்க இலக்கியம்: கவிதையும் கருத்தும். ப.86.
3. செல்வராசு, ரா., பண்டைத்தமிழர் திருமண வாழ்க்கை. ப.201.
4. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவு. ப.282.
5. மாதையன், பெ., சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.158.
6. ஐங்குறுநூறு, கழக வெளியீடு, பா.எண்-480
7. ஆறுமுகம்.ஆ., சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை அரசு. ப.39

**துணைநூற்பட்டியல்**

1. ஆறுமுகம்.ஆ., சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை அரசு. பாவேந்தர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு,2008
2. சிவதம்பி, கா., சங்க இலக்கியம்: கவிதையும் கருத்தும். உலகத் திழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, முதற்பதிப்பு,2009
3. செல்வராசு, ரா., பண்டைத்தமிழர் திருமண வாழ்க்கை. நாம் தமிழர் பதிப்பகம், முதற்பதிப்பு, 2009
4. ஐங்குறுநூறு, கழக வெளியீடு, வைச சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி,
5. மாதையன், பெ., சங்க இலக்கியத்தில் குடும்பம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2010

௸



Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 51. | ப. கோபிகிருஷ்ணன் | புலச்சொல் கூறுகள் | 329-332 |
| 52. | P. SADASIVAM & M.R. RAJKUMAR | IMPACT OF EDUCATIONAL WELFARE SCHEMES ON EMPOWERMENT OF DALITS IN TAMIL NADU (1991-2011) | 333-339 |
| 53. | ப. ராஜேஸ்வரி & சே. தெய்வக்கன்னி | ஆழ்வார் பாசுரங்களில் திருமால் அவதாரங்கள் | 340-345 |
| 54. | JIJA, M.B., | AXIAL DIMENSION OF LOCATIVES IN MALAYALAM | 346-356 |
| 55. | நா. இரமேசு & பெ. கண்ணன் | சங்க அகப்பாடல்களில் தோழி | 357-364 |
| 56. | ரா. கலைவாணி | தற்காலக் கவிதைகளின் நோக்கும் போக்கும் | 365-369 |
| 57. | கு. கங்காதரன் & பு. ஜார்ஜ் | உமாதேவி பாடல்களில் பயின்று வரும் பண்பாட்டுக் கூறுகள் | 370-373 |
| 58. | S. SIVAKUMAR | GROWTH AND DEVELOPMENT OF SAIVISM IN TAMIL NADU | 374-377 |
| 59. | பா. கிருஷ்ணமூர்த்தி & மு. பாண்டி | புதுக்கவிதைகளில் புலப்பாட்டு உத்திகள் | 378-385 |
| 60. | K. THANGARAJ & C. SELVARAJ | FAIRS AND FESTIVALS IN CHETTINAD | 386-393 |
| 61. | இல. மேனகா & பெ. கண்ணன் | சி.எம். முத்துவின் படைப்புகளில் உழவும், வேளாண்மையும் | 394-399 |
| 62. | சே. மேரி & து. மேஷாக் | தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் காட்டும் இறையாட்சியும் இவ்வுலக ஆட்சியும் | 400-404 |
| 63. | ஞா. பெஸ்கி | எஸ்.பொ.வின் நனவிடை தோய்தல் சித்திரிக்கும் பொருள்சார் பண்பாடு | 405-411 |
| 64. | இரா. முரளி கிருட்டினன் | முல்லைத் திணையில் காணலாகும் இல்லறநெறி | 412-416 |
| 65. | எஸ். ஸ்ரீதர் & க. இக்பால் | திருமங்கையாழ்வாரும் மற்றைய ஆழ்வார்களும் | 417-426 |
| 66. | J. SASIKALA | HISTORY OF POLITICAL PARTICIPATION OF WOMEN IN INDIA | 427-433 |
| 67. | P. SANKAR | STATUS OF WOMEN THROUGH AGES | 434-440 |
| 68. | மு. பாரதி | புறநானூறு காட்டும் இல்லற நெறி | 441-444 |
| 69. | AJITH R PILLAI & P. SETHURAJAKUMAR | PARENTING AND JOB-RELATED STRESS AMONG EMPLOYED MOTHERS OF ADOLESCENTS- A SOCIOLOGICAL ANALYSIS | 445-450 |
| 70. | NAGAVENI. E & D. THIRUMALRAJA | SOCIAL WELL-BEING FOR THE PERSON WITH A DISABILITY IN INDIA: THE ESSENTIAL FOR AN INCLUSIVE REDRESSAL MECHANISM | 451-459 |
| 71. | மு.செந்தில்குமார் | தாய்மொழி பற்றில் கலைஞர் மு.கருணாநிதியின் பங்கு | 460-466 |
| 72. | வெ. திருவேணி | கார்நாற்பது காட்டும் தலைவியின் மாண்பு | 467-473 |
| 73. | அ. தௌ.ஃபீக் ரமீஸ் | யுவன் சந்திரசேகரின் கவிதை மொழிபெயர்ப்புத் திறன் | 474-481 |
| 74. | கு. விமலாரமணி & தே. இந்திரகுமாரி | ஒப்பீட்டு நோக்கில் பெண்ணிய சிந்தனைகள் | 482-488 |
| 75. | இரா. இராஜா & ம. இளையராஜா | சு. சமுத்திரம் நாவல்களில் பெண்ணிய விழுமியங்கள் | 489-492 |
| 76. | எம். பானுமதி | குறிஞ்சித்திணைப் பாடல்களில் விலங்குகள் | 493-501 |
| 77. | S. உமா கௌரி & சுனிதா | ஊத்துக்காடு வெங்கட சுப்பையரால் பாடப் பெற்ற தெய்வங்கள் மற்றும் ஸ்ரீமத் பாகவதபுராண இசை நாடகப் பாடல்கள் | 502-511 |
| 78. | வெ. கலைச்செல்வி & இரா. அருள்மொழி | மூவர் பதிகத்தில் இடம்பெறும் புராண வரலாற்றுக் குறிப்புகள் | 512-516 |
| 79. | வே.தா. தர்மராஜா | கவிஞர் மித்ரா கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள் | 517-524 |
| 80. | பெ. சுமதி | சிறுகதைகளில் பெண்கள் ஒடுக்கப்படும் நிலை | 525-534 |
| 81. | ஆர். சரவணன் & நீல. மாதவன் | அறநூல்களில் சமுதாயச் சிந்தனைகள் | 535-543 |
| 82. | சா. அனி கரோலின் & ஆ. விஜயலெட்சுமி | சுஜாதாவின் கணினி அறிவியல் குறித்த ஆளுமை | 544-549 |
| 83. | ஸ்ரீ. அழகுலெட்சுமி & இரா. பழனிச்சாமி | திலகவதியின் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள் | 550-554 |
| 84. | P. பிரேம்குமார் & D. ஆக்னஸ் ஷர்மிலி | இசை வளர்ச்சியில் எண்மவியல் ஒலிப்பதிவுக் கூடத்தின் பங்களிப்பு | 555-559 |
| 85. | கா. இரவிச்சந்திரன் | கிரதார்ஜுனியம் : சிற்பம், காவியம், தெருக்கூத்து | 560-565 |
| 86. | மு. ஜோதி & டே. கிறிஸ்துமணி | சங்க இலக்கிய நோக்கில் மருதநில மக்கள் | 566-570 |
| 87. | இரா. அருணா | அணி இலக்கணம் கற்றல்-கற்பித்தலில் திரையிசைப்பாடல்களின் பங்கு | 571-575 |
| 88. | K. SARANYA & V. VIJAYARANGAM | THE IMPORTANT JAIN PILGRIMAGE CENTRES OF TOURIST INTEREST IN VILLUPURAM DISTRICT | 576-581 |
| 89. | Md. CHINGIZ KHAN& Md. BAHARUDDIN SHAH | AN ASSESSMENT OF REPRESENTATION AMONG *PANGAL* IN MANIPUR: FROM GENDER DISPARITY PERSPECTIVE | 582-592 |
| 90. | TRILOCHAN KUMAR & PARIKSHAT SINGHMANHAS | CROSS-CULTURAL DIVERSITY IN TOURISM BUSINESS OPERATIONS: FINDING SPACE FOR STRATEGIC PARTNERSHIP AMONGST THE NATIONS (INDIA-EU). | 593-606 |
| 91. | மா. செல்வகுமார் | தமிழ் இலக்கியத்தில் நிலமும் மேலாண்மையும் | 607-610 |
| 92. | பொ. தீபா | இரட்சணிய யாத்திரிகத்தில் சிலுவைப்பாடுகள் | 611-615 |
| 93. | பா.விஜய சோபியா & கோ. கோதண்டராமன் | எஸ். ராமகிருஷ்ணனின் யாமம் புதினத்தில் கனவு மனம் | 616-620 |
| 94. | M. JEBAKUMAR & V. SUNDARARAMAN | DIFFUSION OF DIGITAL INDIA PROGRAMS AMONG YOUTH IN TAMIL NADU: OPPORTUNITIES AND CHALLENGES | 621-627 |
| 95. | க. இக்பால் | ஐங்குறுநூறு செவிலிக் கூற்றுப் பத்து கூறும் தாய்-தந்தை-சேய் உறவு நிலைகள்" | 628-633 |
| 96. | M. EVANGELIN & V. SUNDARARAMAN | A STUDY OF SEMIOTIC ANALYSIS OF REALITY SHOW [SOLLUVATHU YELLAM UNMAI] | 634-638 |
| 97. | J. THAMARAI SELVI & C. VISWANATHAN | IMPACT OF SIMPLIFIED KUNDALINI YOGA ON MENTAL WELLBEING | 639-646 |
| 98. | செ. ரவிசங்கர் | ஒப்பீட்டு நோக்கில் பொருள்கோள் கோட்பாடு | 647-652 |
| 99. | P.SIVARAMAN&Y.SUNITHA | WHY MALE DOMINANCE IN KATHAKALI | 653-657 |
| 100. | அ.ல.மகேஷ்குமார் & ப. நடராஜன் | மிருதங்க பாணிகள் ஓர் ஆய்வு | 658-662 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner